ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ஹரிஸமய திவாகரம்.

தொகுதி ௨. குரோதன ௵ ஆடி ௴ பகுதி ௭.
VOL. 2. JULY & AUGUST 1925. No. 7.

## முனையதரையர்.

சோழநாட்டில் திருக்கண்ணபுரத்திலே முன்னாளில் முனையதரையரென்பா ரொருவர் திருமால் பக்தியிற் சிறந்து விளங்கினர். அவர் அக்காலத்தில் அரசாட்சிசெய்த சோழ ராஜாவினால் அபிமானிக்கப்பட்டு அவனுடைய தண்டத்தலைவராகும் உத்யோக பதவியில் அமர்ந்திருந்தார். இருபது நாடுகள் அவருடைய அதிகார வரம்புக்கு உட்பட்டனவாயின. அவ்வவ் விடத்திற் சென்று ஆணை செலுத்திச் சிற்றரசர்களிட்ட திறைப்பொருள்களைக் கொண்டு தம் வேந்தனிடம் சேர்ப்பிப்பதே அவருடைய கடமையாயிருந்தது,

அக்காலத்து அவரைப் பெரிதும் பேணி யொழுகியவளாய காதற்கணிகை யொருத்தி யுண்டு. அவளிடம் அவர் மிகுந்த அன்பு செலுத்தி வந்தார். ஆனாலும் அதனால் அவருக்குத் திருமாலினிடம் உள்ள பக்தி சிறிதும் குறைந்திலது. திருக்கண்ணபுரத்திலேயே அவர் தமக்காக ஓர் அழகிய திருமாளிகை அமைத்துக்கொண்டார். அத் திருப்பதியில் எழுந்தருளியுள்ள சவரிராஜப் பெருமாளுக்கு ஸகலவிதமான கைங்கர்யங்களும் செய்வதே தமக்குப் பெருவாழ்வாக மதித்தனர்.

அவ்வாறு நிகழ்ந்துவருகையில் நாட்டில் கொடிய பஞ்சமுண்டாயிற்று. உயிர்கள் யாவும் பசிப்பிணியால் வருந்தி மெலிந்தன. முனையதரையர் மேற்கொண்ட கைங்கர்யமும் முட்டுப்பாடுற்றது.

அதனால் அவர் 'எம்பெருமானும் அவனது அம்சபூதருமான இவ் வான்மகோடிகளும் வருந்துவதே' என்று மிகவும் தளர்ச்சி யடைந் தார். அரசனுக்குத் தாம் செலுத்தவேண்டிய திறைப்பொருள்கள் யாவற்றையும் ஆலோசனையின்றித் தானங்களிலும் பூஜைகளிலும் செலவிட்டார்.

அவ்வாறு பொருள்முழுது மழிந்து அவர் வறியரானபிறகு தேசத்தில் க்ஷாமமும் ஒருவாறு தவிர்ந்தது. ஆனால் திறைப்பொருள் கள் தனக்கு உரியகாலங்களில் கிடைக்கப்பெறாமை கண்டு, சோழன் முனையர்மீது மிகவும் முனிவுகொண்டவனானான். 'இறைப்பொருளைக் கொள்ளைகொண்ட முனையனை இரக்கமின்றிச் சிறைப்படுத்துங்கள்' என்று அவன் தன் ஏவலாளருக்குக் கட்டளையிட்டான். அவ்வண் ணமே அவர்களும் திருமாலடியவருக்குப் பற்பல தீமைகளிழைத்து அவரைச் சிறையிட்டுச் சென்றனர்.

ஆனால் முனையதரையரோ தமக்கு எத்தகைய பெருந்துன்பம் நேரிடினும் எம்பெருமானையே உற்ற துணையாகப் பற்றியிருந்தார். காதற்கணிகையாகிய அவருடைய தேவியும் உணவு முதலாயின உட் கொள்ளுதலின்றி ஆங்குள்ளதொரு வாவிநீரில் நின்று, 'எம்பெரு மானே! இன்னும் ஐந்து நாட்களில் என் காதலனை அடையாவிடின் எரியினில் மூழ்கி யான் இன்னுயிர் துறப்பேன்' என்று ஆற்றிய வண்ணமாகவே இருந்தாள்.

இஃதிங்ஙனமாக, பிறர்துயர் பொறாத பேரருளாளரான சவரிப் பெருமாள் அவ்விடரினை நீக்கத் திருவுள்ளம் பற்றினர். அதனால் ஒரு பாகவதரைப்போல வேஷந்தரித்து அவர் சோழராஜாவினுடைய கனவிடைத் தோன்றினர். 'யான் கண்ணபுரத்தான்; என் அடியவற் குற்ற ஆரிடர் களைவான்வேண்டி உன்னிடம் வந்தேன்; நீ உடனே முனையதரையனைச் சிறையினின்றும் விடுவிப்பாயாக": என்று அவர் அவனுக்குச் கூறிவிட்டுச் சென்றார். அரசன் விழித்தெழுந்து பெரி தும் அதிசயமுற்றவனானான். சிறிதும் தாமதமின்றித் திருக்கண்ண புரத்தை யடைந்தான். அங்கு முனையதரையரைச் சிறைவீடுசெய்து, 'தேவரீராலேயே அடியேனுக்கு எம்பெருமான் ஸேவை ஸாதித்தார்' என்று அவர் திருவடிகளில் தெண்டனிட்டு மிகவும் புகழ்ந்து கொண் டாடினன். முனையரும் விரைந்துசென்று, தம் தேவியாரைத் தீப் பாயுமுன்னரே கண்டுகொண்டார். இருவரும் ஆனந்த பரவசமாயி

னர். அதன்பின்பு அவர்கள் 'எம்பெருமான் திருவருள் இருந்தவா றென்னே': என்று அவனை ஏத்தியவண்ணமாகவே தம் திருமாளி கைக்குப் போய்ச் சேர்ந்தனர்.

அங்கு முனையதரையர்தேவி அவருக்குப் பாலரிசி, பயறு, சர்க் கரை இவை கலந்து அட்ட பொங்கலமுதினைப் போனகமாகப் படைத் தாள். அதற்குமுன் நெடுநாளாகப் பசியினால் வருந்திக் களைத்திருந் தமையால், அவ் வடிசில் அவருக்கு அமிர்தமயமாகத் தோன்றியது. அதனால் அவர், 'இத்தகைய நல்லுணவு எம்பெருமானுக்கே உரியது' என்று சொல்லி, நிறைந்த ஆர்வத்துடன் மானஸமாக அதனைப் பெருமாளுக்கு ஆராதனைபுரிந்து பின்னர் உட்கொள்ளுவாராயினர். அது நிற்க,

மறுநாட்காலையில் திருக்கண்ணபுரத்துத் திருமால் கோவிலில் அர்ச்சகர்கள் வழக்கப்படி உள்ளே புகுந்து பார்த்தவளவில், எம் பெருமானுடைய திருமேனியில் பொங்கலமுதின் நெய் வடிந்தொழு கிய அடையாளங்கண்டு திடுக்கிட்டார்கள். 'யாது விபரீதம் விளைந் ததோ' என்று யாவரும் உண்மையறியாது கலங்கினர். பின்னர்த் தீர விசாரித்து நிகழ்ந்தன யாவுந் தெரிந்துகொண்டார்கள். அதனால் அவ்வூராரனைவரும் அப் பெருமானது திருவிளையாடலை நினைந்து நினைந்து அகங்களித்தவராயினர். தம் பொருட்டாகப் பெருமாள் நிகழ்த்திய இவ் வற்புதமானது என்றென்றும் விளங்கித் தோன்று மாறு, முனையர் அன்றிரவு அர்ப்பித்த பொங்கலமுது அவருக்கு எக் காலத்தும் நிவேதனம் செய்யப் பெறுதற்கு வேண்டிய வருவாய்களை ஏற்படுத்தினர். அது 'முனியோதனம்' என்னும் ப்ரஸித்தியோடு பெருமாளுகந்து திருவமுது செய்யும் சித்ரான்னமாக இன்றைக்கும் வழங்கிவருகிறது.

இந்த வ்ருத்தாந்தம் திருக்கண்ணபுர ஸ்தலபுராணத்தில் முனி யோதன வத்தியாயமென்னு மிடத்தில் விளங்க உரைக்கப்பட்டுள்ள தென்பர். இது ஒரு புராண வரலாறென்றமட்டி லமையாது பிற்கா லத்து ஆராய்ச்சிமுறையாற் றெளிந்த சரித்திர வுண்மையோடு மாறு கொள்ளாமலு மிருப்பது இங்கு விசேஷமாகக் குறிப்பிடத்தக்க தாகும்.

சோழநாட்டின் பலவகைப் பெருமைகளையும் எடுத்துப் பேசுவதாகிய சோழமண்டல சதகம் என்னும் தமிழ்நூல் ஒன்றுண்டு. அதில் இவ் வதிசயச் செய்தி பின்வருமாறு பாராட்டப்படுகிறது:-

"புனையுங்குழலாள்பரிந்தளித்தபொங்கலமுதும்பொரிக்கறியும்
அனையசவரிராஜருக்கேயாமென்றருந்துமாதரவின்
முனையதரையன்பொங்கலென்றமுகுந்தற்கோதுமுதுகீர்த்தி
வனையும்பெருமையெப்போதும்வழங்குஞ்சோழமண்டலமே."

இதனால் முனையதரையரளித்த பொங்கலமுதானது சோழமண்டல முழுமைக்குமே பெரும் புகழ்விளைத்தற் கேதுவாயிற்றென்பது வெளிப்படை. அஃதொருபுற மிருக்க,

முனையருடைய காதற்கணிகை அவர் பிரிவாற்றாது கூறியது என்னும் வெண்பா ஒன்று தமிழ்நாவலர்சரிதையிற் காணப்படுகிறது.* அன்றியும் விக்ரமசோழனென்னும் ராஜாவை ஒட்டக்கூத்தர் என்னும் புலவர்பெருமான் புகழ்ந்துபாடிய விக்ரமசோழனுலா என்னும் ப்ரபந்தத்தால் அச் சோழனுக்குரிய ப்ரதான மந்திரியும் சேனாநாயகருமாக விளங்கியவர் 'முனையர்கோன்' என்னும் பெயருடையாரென்று தெரிகிறது.† இவ்விரண்டிடங்களிலும் கண்ட முனையரும் மேலே குறித்த முனையதரையரும் ஒருவராகவே கொள்ளுதல் கூடுமென்பது சரித்ரவிமர்சகர்கள் அபிப்ராயம்.§

---

T. N. அப்பனையங்கார்,
மதுரை.

---

*"இன்றுவரினென்னுயிரைநீபெறுவைஇன்றைக்கு
நின்றுவரினன்னதுவுநீயறிவை—வென்றி
முனையாகலவிமுயங்கியவாறெல்லா
நினையாயோநெஞ்சத்துநீ" தமிழ் நாவலர் சரிதை.

†"ஆர்க்குங்கழற்காலனகன்றனதவையுட்
பார்க்குமதிமந்த்ரபாலகரிற்—போர்க்குத்
தொடுக்குங்கமழ்தும்பைதூசிநெடுஞ்சூடிக்
கொடுக்கும்புகழ்முனையர்கோனும்" விக்ரம சோழனுலா.

§இங்ஙனமான அபிப்ராயமும், அதனோடு தொடர்புடைய இவ் விஷயங்களின் ஆராய்ச்சியும் செந்தமிழ்ப் பத்திரிகையின் ஏழாந் தொகுதியில் வெளிவந்துள்ளன.

197 Roll-117
1249

ஸ்ரீ:

# ஸ்ரீவைஷ்ணவர்களின் பெருமை.

(139-ம் பக்கத் தொடர்ச்சி.)

இப்படிச் சீதாபிராட்டி யிருந்ததற்குக் காரணம் யாதென்றால்? "அவன் கைக்கொண்ட பொருளாகிய நமக்கு அவன் ஏது செய்யினும செய்க என்று இசைந்திருக்கையே கடமை; நமக்கோர் பலமும், அது பெறுகைக்குப் பிரயத்தனமும் பாரதந்தரமாயிருக்கின்ற நம் ஸ்வரூபத்திற்குச் சேராது" என்று திடமாகக்கொண்ட நிச்சய புத்தியேயாம். நம், ஆழ்வாராதியரெல்லாம் இந்த நிச்சய வுணர்வுடையவராவார். இந்த நிச்சய புத்தியாகிய அத்யவஸாய ஜ்ஞானமானது மேன்மேலும் வளர்ந்தவுடன் அது "அவனைப் பெற்றன்றித் தரியேன்" என்ற விரைவை உண்டாக்கும். அதனால் அவன் கைபார்த்திருக்கும் தங்கள் தன்மைக்கு விரோதமான நோன்புநோற்றல், தேவதாந்தரங்களின் காலில் விழுதல், தூதுவிடுதல், முதலிய முயற்சியில் பிரவேசிப்பார்கள். இவ்வாறு இவர்கள் விரோதமுயற்சியில்பிரவேசிப்பதற்குக்காரணம் *விஷயவைலக்ஷண்ய ஜ்ஞாநமேயாம். அஃதாவது-தாம் அடையவிரும்பிய எம்பெருமானுடைய பெருமையைப்பற்றிய அறிவாம். இந்த அறிவானது நெஞ்சிற் குடிகொள்ள ஆசை வளரும். அது, "நம்மால் செய்யத்தக்க காரியமொன்றுமில்லை; ஸர்வேசுவரனே நம் காரியஞ் செய்யவல்லன் அப்படியிருக்க நாம் பலமடைதற்குத் தாமதமென்?" என்ற நினைவை யுண்டுபண்ணும். அதன்பிறகு பயனடையவொட்டா திருக்கின்ற பாப மிகுதியையும், எண்ணித் தொலையாத நாளெல்லாம் பயனடையா தொழிந்ததையும் நோக்கி இப்பொழுதே பேற்றை அடையவேண்டுமென்ற ஓர் விரைவுண்டாகும். இந்த த்வரை (விரைவு) ஜ்ஞானமும் ஸ்வரூபத்திற்கு இசைந்ததேயாம். "பேற்றுக்கு த்வரிக்கையும்" என்று லோகதேசிகன் அருளிச்செய்ததாலும் அறியலாம். இன்னும் த்வரைஜ்ஞாந முதலியவைகளை ஆழ்வார்கள் வாய்மொழிகொண்டறியலாம்.

---

* விஷயவைலக்ஷண்ய ஜ்ஞாநத்தின் விவரணம் பின் வருகிற ஈசுவர ஸௌந்தர்யம் என்ற வியாசத்திற் காண்க.

ஆழ்வார்கள் ப்ரபந்தங்களில் தலைமகள் பேசுவதாகவும், தோழி பேசுவதாகவும், நற்றாய் பேசுவதாகவும் பலதுறைப் பாடல்கள் காணப்படுகின்றன. அங்குத் தலைமகளாகக் குறிக்கப்பட்டது த்வரை ஜ்ஞாநமாம். தோழி, ஸம்பந்தஜ்ஞாநமாம். அவனைப்ய உறுதியாகப்பற்றிய அத்யவஸாயஜ்ஞாநம் நற்றாயாம். த்வரை ஜ்ஞாநம் அதிகரித்தபோது தலைமகள் பேசுவதாகப் பேசுவார்கள். ஸம்பந்தஜ்ஞாநம் அதிகரித்தபோது தோழி பேசுவதாகப் பேசுவார்கள். அத்யவஸாயஜ்ஞாநம் அதிகரித்தபோது தாய் பேசுவதாகப் பேசுவார்கள். தலைமகள் பேச்சு விரோத மொழியாகவும், தாய் பேச்சுத் தடைமொழியாகவும், தோழி பேச்சுத் தேறுதல்மொழியாகவு மிருக்கும். த்வரை ஜ்ஞாநமே தலைமகளாதலால் அந்தத் த்வரை பேற்றையடைய தம்மியல்புக்கு விரோதமான முயற்சியில் மூட்டும். ஆகையால் தலைமகள் பேச்சு விரோதமொழியா யிருக்குமென்று சொல்லப்பட்டது. எம்பெருமானை உறுதியாகப்பற்றிய அத்யவஸாயஜ்ஞாநமே தாயாதலால் அந்தத்தாய் தம் மியல்புக்கு விரோதமான கார்யத்திற் பிரவேசித்த தலைமகளை நோக்கி 'நீ இப்படிச் செய்வது தகாது' என்று தடைசெய்வாள். ஆகையால் தாய்பேச்சைத் தடைமொழி என்று சொல்லப்பட்டது. ஸம்பந்தஜ்ஞாநமே தோழியாதலால் அந்தத் தோழி, 'எவ்வாறுவது தலைமகனை யடையவேண்டும்' என்ற கருத்தால் வருத்தமுற்றிருக்கிற தலைவியை நோக்கி நீ உன் நாயகனைக் குறித்து வருந்தவேண்டா; அவன் உன்னைக் காப்பாற்றுவதற்குக் கடமைப்பட்டவனா யிருக்கின்றானென்று தேறுதல் கூறுவாள். ஆகையால் தோழிபேச்சு தேறுதல்மொழி என்று சொல்லப்பட்டது. இந்த வேறுபாடெல்லாம் ஆழ்வாரருளிய பாடல்களால் அறியலாம். அது வருமாறு:-

"பொங்கார்மென்னிளங்கொங்கைபொன்னேபூப்பப்
பொருகயல்கண்ணீரரும்பப்போந்துநின்று
செங்காலமடப்புறவம்பெடைக்குப்பேசும்
சிறுகுரலுக்குடலுருகிச்சிந்தித்தாங்கே
தண்காலும்தண்குடந்தைநகரும்பாடித்
தண்கோவலூர்பாடியாடக்கேட்டு
நங்காய்நங்குடிக்கிதுவோநன்மையென்ன
நறையூரும்பாடுவாள்காவில்கின்றாளே"

என்பதாம். இதனால், தலைமகள் தலைமகனுடைய ஊரைச்சொல்லி ஆடல் பாடல்களைச் செய்வதைக்கண்ட தாய் 'நீ இவ்வாறு செய்வது நம்குடிப் பழியாம்' என்று தடைசெய்தாளென்று சொல்லப்பட்டது.

"காரேற்றிருள்செகிலேற்றின்சுடருக்குளைந்துவெல்வான்
போரேற்றெதிர்ந்ததுபுன்றலைமாலைபுவனியெல்லாம்
நீரேற்றளந்தநெடியபிரானருளாவிடுமே
வாரேற்றிளமுலையாய்வருந்தேலுன்வளைத்திறமே"

இதனால், பிரிந்தநாயகன் வந்து சேருதற்குரியதும், அவனோடு கூடியிருப்பதற்குத் தக்க இரவின் தொடக்கமுமாகிய மாலைப்பொழுது வரக்கண்டு இன்னும் அவன் வரக்காணேனே யென்று தலைமகள் வருந்த இந்நிலை கண்ட தோழி 'இது நீ நினைக்கின்ற மாலைப்பொழுதன்று; இருளாகிய கருத்த எருதுக்கும், சூரியனாகிய சிவந்த எருதுக்கும் போர் நடக்கிறது; நீ கருதிபபடி உண்மையான மாலைப்பொழுதா யிருக்குமாகில் எல்லா லோகத்தையும் ரக்ஷிக்கின்ற கிருபையுடைய தலைமகன் உனக் கருள்செய்ய வாராதொழிவானோ? அவன் வாராதிருப்பதினால் இதை உண்மையான மாலைப்பொழுதன்றென்று துணிவாய்; உன் கைவளைகள் கழல்தலைப்பற்றி நீ வருத்தப்பட வேண்டா; உன் வளைகள் கழலாதிருக்க அவன் விரைவில் வந்து அருள்செய்வான்' என்று தோழி தேறுதல் கூறியதாகச் சொல்லப்பட்டுளது.

இந்த இரண்டு பாடல்களால் தலைமகள், தோழி, தாய் என்ற இவர்களின் பேச்சு இன்னின்னபடி யிருக்குமென்று முற்கூறியதற்கு ஏற்றபடி எடுத்து விளக்கிக் காட்டலாயிற்று.

த்வரை ஜ்ஞானமானது, விரோத முயற்சியில் மூட்டுவிக்கும் என்பதை ருக்மணி விருத்தாந்தத்தாலும் அறியலாம். கண்ணனையே காதலித்த ருக்மணி, அறிபாப்பருவத்தில் தன் தந்தைசொற் கடவாமல் அந்தப்புரத்திலிருந்தபொழுது, பிக்ஷைக்கு வந்த ஒரு ப்ராஹ்மணன் கண்ணபிரானுடைய குண நலங்களைப் பாடினான். அதை ருக்மணி காதாரக் கேட்டாள். அப்பொழுது அவளுக்குக் கண்ணபிரானை யடையவேண்டுமென்ற எண்ணமுண்டாயிற்று. பின் ப்ராஹ்மணன்

200



விஷயத்தில் யாதொரு சந்தேகப்படாமல் கண்ணனிடத்தில் போய் வரும்படித் தூதாக அனுப்பினாள். இவளுக்குப் பெற்றதகப்பனும், தமையனும் விரோதியாய்விட்டபடியால் கண்ணனை யடைவதற்குக் கண்ணனையே உபாயமாகக்கொண்டாள். இவளே துர்க்கையைத் தொழுதாள். மேலும் இவள் கண்ணபிரான் கருத்தறிவதற்கு விடுத்த *"பூர்த்தேஷ்டதத்தே" என்றது முதலான சுலோகம் வரையப்பெற்ற பத்திரிகையால் இவள் நோன்பு நோற்றதையும் காணலாம்.

[தொடரும்]

---

காரப்பங்காடு,

ஸ்ரீ. உ. வே- சிங்கப்பெருமாள் ஸ்வாமியின் தமையனார் குமாரரும்,
அந்தேவாசியுமான வேங்கடாசார்யர்,
சேரங்குளம்.

---

*"பூர்த்தேஷ்ட தத்த நியம வ்ரத தேவ்விப்ர குருவர்
ச்சநாதிபி ரலம் பகவாந் பரேச:, ஆராதிதோயதி
கதாக்ரஜ ஏத்ய பாணிம் க்ருஹ்ணது மேந
தமகோஷ ஸூநா யோந்யே."

இதன் பொருள் பூர்த்தத்தாலும், இஷ்டத்தாலும், தத்தத்தாலும். நியம வ்ரதங்களாலும், தேவ ப்ராஹ்மண குருபூஜைகளாலும், பரதேவதையாயுள்ள பகவானை மிகவும் ஆராதித்திருந்தேனாகில் கண்ணபிரானே வந்து என்னுடைய கையைப் பிடிக்கக்கடவன். தமகோஷன் புதல்வனாகிய சிசுபாலன் பிடிக்காதொழிக என்பதாம்.

பூர்த்தமாவது:-கிணறு, தடாகம், நந்தனவனம் முதலியவை செய்வதாம்.
இஷ்டமாவது:- யாகமாம்.
தத்தமாவது:-ஸ்வர்ண முதலியவற்றைத் தானஞ் செய்வதாம்.
நியமமாவது:-புண்ணிய தீர்த்தமாடல் முதலியவையாம்.

ஸ்ரீ:

# ஈசுவர ஸௌந்தர்யம்.

ஈசுவர ஸௌந்தர்யமாவது:- ஸர்வேசுவரனுடைய அழகாம். ஸௌந்தர்யம்-அழகு. இது, ஈசுவரனுடைய திருமேனியைப் பற்றிக்கிடக்கிற குணம்; யாவரையும் ஈடுபடுத்தும் இயல்புடையதாயிருக்கும். இதைக் குறித்து "ஆண்மகனைப் பெண்ணுடை யுடுக்கும்படி செய்யும் அழகு" என்று நம் பூர்வாசார்யர்களும் அருளிச்செய்திருக்கிறார்கள். இது நிற்க,

ஸ்ரீ ராமபிரான், ஸ்ரீ குகப்பெருமாளிருக்கின்ற சிருங்கிபேர நகரத்திற்கு எழுந்திருளி இளையபெருமாளால் (லக்ஷ்மணனால்) அமைத்துக்கொடுக்கப்பட்ட பர்ணசாலையில் நித்திரை செய்துகொண்டிருந்தார். அப்பொழுது இளையபெருமாள் பெருமாளுக்கு என்ன தீங்கு வருமோ? என்று பயந்து வில்லையேந்திய கையினராய் நடையாடுகின்ற மதில்போல் சுற்றிக்கொண்டு காவல் புரிந்துகொண்டிருந்தார். இந் நிலைகண்ட குகப்பெருமாள் ஒருதம்பி தாயைக்கொண்டு ராஜ்யத்தை வாங்கி மகுடாபிஷேகத்திற்காகக் கட்டிய காப்புக்கையோடே காட்டிலே தள்ளிவிட்டான். இவனும் அவனைப்போன்ற ஒரு தம்பியாவான். இவனும் தனியிடத்தில் யாது கருதி இப்படி வில்லுங்கையுமாய்த் திரிகிறான்? ஒன்றுந் தோன்றவில்லையே? என்று சந்தேகப்பட்டு தான் வில்லைக் கையிற்கொண்டு "இவன் ஏதேனும் பெருமாளைத் தீங்கு செய்வானாகில் இவனை யடியோடு போக்கிவிடுவேன்" என்று இளையபெருமாள் அடியிட்டுச் செல்கிற இடத்திற் பின்னடியிட்டுத் திரிந்தார். இதுகண்ட குகப்பெருமாளுடைய சேவகர்கள் பெருமாளைச் சுற்றித்திரிகிற இவ் விருவரில் ஒருவன் ஜ்ஞாதி (தாயக்காரன்). மற்றொருவன் குறும்பன். இவ் விருவரும் பெருமாளுக்கு ஏதேனும் தீங்கு செய்தாலும் செய்வார்கள் என்று சந்தேகங்கொண்டு ஒவ்வொருவரும் வில்லேந்திப் பெருமாளைப் பாதுகாத்து வந்தனர். இப்படி ஒருவர்க்கொருவர் சந்தேகப் படுவதற்குக் காரணம் "ஒருநாள் முகத்திலே விழித்தவர்களை வடிவழகு படுத்தும் பாடாயிற்றிது" என்று லோகதேசிகன் அருளிச்செய்தார்.

மேலும் பெரியாழ்வார் பாண்டியனால் கொண்டாடப்பட்டு வீதி வலம் வருகின்ற காலத்தில் பரப்ருஹ்ம வஸ்துவாகிய எம்பெருமான் இவர் கண்ணுக்குப் புலப்பட அப்பொழுது அவனுடைய ஸௌந்தர்யத்தில் இவர் ஈடுபட்டுப் "பல்லாண்டு பல்லாண்டு" என்று வாழ்த்துக் கூறினார்.

இதனால், ஈசுவரனுடைய ஸௌந்தர்யமானது, தன்னிடத்தில் ஈடுபட்டவர்களைப் புத்தி மாறுட்டஞ்செய்து தங்களை ரக்ஷகராக நினைக்கும்படி செய்யவல்லது என்பது பெறப்படும். இதுபற்றியே லோகதேசிகனும் "ஸௌகுமார்யத்தை அநுஸந்தித்தால் தன்னை கடகாகக்கொண்டு அவனை நோக்கும்" என்று அருளிச்செய்தார்.

இன்னும் ஆழ்வாராதியர் எம்பெருமானே எல்லா உறவுமுறையுமாவான் என்ற உறுதியான எண்ணங்கொண்டவர்கள்; தங்களுக்கு ஒரு நன்மை யுண்டாக்கிக்கொள்ளவேண்டுமென்று ஒரு முயற்சியும் செய்யாதவர்கள்; அவன் கைபார்த்துக்கொண்டிருப்பவர்கள். இவர்கள் இத்தன்மையுடையார்கள் என்பதை "களைவாய்துன்பங் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்" என்று இது முதலான அவர்கள் வாக்யங்களா லறியலாம். இப்படியுள்ள இவர்கள் தங்கட்கு விரோதமான தூதுவிடல், நோன்புநோற்றல், மடலூர்தலாகிய தொழில்களைச் செய்தார்கள். இவர்களை இவ்வாறு செய்வித்ததும் ஸர்வேசுவரனுடைய வடிவழகேயாம். இன்னும், திருவடி (ஹனுமான்) சீதாபிராட்டியாரைக் கண்டு கணையாழியைக் கொடுத்துப் பிராட்டியாரால் கொடுக்கப்பட்ட சூடாமணியைப் பெற்று அதை, ஸ்ரீ ராமபிரானிடத்தில் ஸமர்ப்பித்து நின்றார். இந்நிலையில் ஸ்ரீ ராமபிரான், 'மஹோபகாரஞ் செய்த இந்தத் திருவடிக்கு நாம் என்ன பரிசில் செய்வது' என்று ஆலோசித்து ஸௌந்தர்யமுடைய நம் திருமேனியை வழங்குவோமென்று தம் திருமேனியால் அணைத்துக்கொண்டார். அப்பொழுது திருவடி ஆநந்த பரவசமுற்றார். இஃதன்றி அர்ஜுனன் தனக்கு உரியதாயிருக்கின்ற யுத்தத்தைச் 'செய்யமாட்டேன்' என்று நின்ற நிலைமையில் கண்ணபிரான் சாரதியாய்நின்ற தன் வடிவழகைக் காட்டி யுத்தம் செய்யும்படி செய்து பின் "மாமேகம் சரணம் வ்ரஜ". (என்னையே உபாயமாகப்பற்று) என்று அருளித்

மகாமகோபாத்யாய, டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம் அடையாறு, சென்னை
203


திருத்திப்பணிகொண்டான். இதனால், அடிமைசெய்தார்க்குப் பரிசிலாகக் கொடுத்ததும், அர்ஜுனனைத் திருத்திப் பணிகொண்டதும், ஸௌந்தர்யமுடைய திருமேனியேயாம் என்பது விளங்கும். இன்னும்,

“கார்வண்ணந்திருமேனிகண்ணும்வாயும்
கைத்தலமுமடியிணையும்கமலவண்ணம்
பார்வண்ணமடமங்கைப்பத்தர்பித்தர்
பனிமலர்மேல்பாவைக்குப்பாவஞ்செய்தேன்
ஏர்வண்ணவென்பேதையென்சொல்கேளாள்
எம்பெருமான்திருவரங்கம்எங்கேயென்னும்
நீர்வண்ணன்நீர்மலைக்கேபோவேனென்னும்
இதுவன்றோநிறைவழிந்தார்நிற்குமாறே”

என்ற இப்பாட்டுத் தாய் பேசுவதாம். தாய் என் மகள் தன் நாயகனுடைய வடிவழகில் ஈடுபட்டு என் வார்த்தையைச் சிறிதும் கேட்கின்றாளில்லை; அந்தோ! நான் பாவஞ்செய்தவளானேன். என் நாயகன் ஊர் எங்கேயென்று கூப்பிடுகின்றாள்; என் நாயகன் ஊருக்கே போவேனென்கின்றாள். என் செய்வது. அவன் வடிவழகில் கண் வைத்துப் பெண்களுக்குரிய தன்மையை இழந்தவர்கள் இப்படியேதான் இருப்பார்கள் போலும் என்றாள். இதனால், ஸர்வேசுவரனுடைய திருமேனியின் ஸௌந்தர்யம் படாதபாடு படுத்துமென்பது பெறப்பட்டது. இது விஷயம் எம்பார் அருளிச் செய்ததாலும் அறியலாம். அஃதாவது:-

சில ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பாரை நோக்கி ஸ்வாமி! தமக்கோர் நன்மையை நாடாமல் ஸர்வேசுவரனுடைய அருளை நோக்கிக்கொண்டிருந்த ஆழ்வார்கள் தங்கட்கு விரோதமாகிய மடலூர்தல், நோன்பு நோற்றல், தூதுவிடல் என்ற தொழில்களில் பிரவேசித்தார்கள்; இது எவ்வாறு பொருந்துமென்று கேட்டார்கள். அதற்கு எம்பார் ஆழ்வார்கள் யாது செய்வார்கள். அவர்கள் தங்கட்கு விரோதமான தொழிலிற் பிரவேசித்தது அவர்கள் குற்றமன்று. ஸர்வேசுவரனுடைய ஸௌந்தர்யமானது, அவர்கள் அவ்வாறு பிரவேசிக்கும்படி செய்தது. ஆதலால் அது அவன் ஸௌந்தர்யத்தின் குற்றமாம். என்று அருளிச்செய்து தக்க திருஷ்டாந்தமும் எடுத்துக் காட்டினார். அஃதாவது:-

தசரத சக்ரவர்த்தி, தம் புத்திரனாகிய ஸ்ரீ ராமபிரானுக்குப் பட்டாபிஷேகஞ் செய்யவேண்டுமென்று மந்திரிமார்களை யழைத்து 'ராமபிரானுக்குப் பட்டாபிஷேகம் செய்யக் கருதியிருக்கிறேன் உங்களுடைய அபிப்பிராயம் என்ன?' என்று கேட்டார். மந்திரிமார்கள் மிகுந்த குதூகலத்தோடு அப்படியே செய்யவேண்டும் என்று சொன்னார்கள்.

அதுகேட்ட தசரதன் மந்திரிமார்களைப் பார்த்து 'ராமபிரானுக்குப் பட்டாபிஷேகஞ்செய்யக் கருதியிருக்கிறேன் உங்கள் கருத்தென்ன' என்று சொல்லி வாய் மூடுவதற்குள், நீங்கள் இப்படிக் களிப்படைவதை நோக்கினால், 'கொடுமை செய்தவன் அரசாட்சி ஒழிந்தது; இனி நீதிமானாகிய ராமன் ராஜ்யபரிபாலனஞ் செய்யப் போகின்றான்; நமக்கு ஒரு குறைவுமில்லை' என்ற கருத்துக் கொண்டிருப்பதாகவன்றோ தோற்றுகிறது: அப்படி நான் என்ன தீங்கு செய்தேனென்று கேட்டான். அப்பொழுது மந்திரிமார்கள் "பஹவோ ந்ருப கல்யாணகுணா: புத்ரஸ்ய ஸந்திதே, குணாங் குணவதோ தேவ தேவகல்பஸ்ய தீமத:" என்றபடி அரசே! உம்முடைய புத்ரனிடத்தில் அனந்தமான கல்யாண குணங்கள் நிறைந்து விளங்குகின்றன. அந்த குணங்களன்றோ எங்களை இவ்வாறு குதூகலங் கொள்ளும்படி செய்தன. அதற்கு நாங்களென்னசெய்வோம். இப்படிப்பட்ட பிள்ளையைப்பெற்ற உம்மீதன்றோ குறையுள்ளது என்றார்கள். இதனாலும் ஈசுவர ஸௌந்தர்யம் எல்லோரையும் ஈடுபடுத்த வல்லது என்பது பெறப்பட்டது.

ஸ்ரீ:

# சரீரஸம்பந்தம்.

சரீரமாவது:— வடிவில்லாதவனாகிய ஆத்மா இருத்தல், நடத்தல், எடுத்தல், படுத்தல் முதலிய தொழிலைச்செய்வதற்குச் சாதனமாயிருப்பதாம். ஸம்பந்தமாவது:— தொடர்ச்சியாம். இந்தச் சரீரத் தொடர்ச்சி ஆத்மாவுக்கு இன்னகாலந்தொட்டு உண்டாயிற்றென்று சொல்லமுடியாததலால் 'ஆத்மாவுக்கு அசித் ஸம்பந்தம் அநாதி' என்று சொல்வார்கள். அன்றி ஆத்மாவுக்குச் சரீரஸம்பந்தம் மோக்ஷமடைகிறவரை கூடியிருந்து பின் விட்டுப்போகிறபடியால் இது, இடையிலே வந்ததென்றுஞ் சொல்வார்கள். ஒன்றைக்குறித்து அநாதியென்றும், இடையில் வந்ததென்றுஞ் சொல்வதானது, ஸம்சயத்திற்கிடமாயிருக்கும். இதற்குத் தக்க சமாதானம் கீழ்க் குறிப்பிடுவதாலறியலாம்.

"கண்ணபிரானைவிண்ணோர்கருமாணிக்கத்தையமுதை
நண்ணியும்நண்ணகில்லேன்நடுவேயோருடம்பிலிட்டுத்
திண்ணமழுந்தக்கட்டிப்பலசெய்வினைவன்கயிற்றால்
புண்ணைமறையவரிந்தென்னைப்போரவைத்தாய்புறமே"

என்று ஆழ்வார் ஸர்வேசுவரனை நோக்கி 'என்னை ஒருடம்பிலே புகுத்துக் கர்மமாகிய கயிற்றால்கட்டி உன்னைவிட்டுப் புறம்பா யொழியும்படி செய்தாய்' என்று முறையிடுகின்ற இப்பாசுரத்தில் "நடுவே யோருடம்பு" என்று சரீரஸம்பந்தம் இடையில் வந்துள்ளதாக அருளிச்செய்திருக்கிறார். இதற்கு,

அநாதியாயுள்ள ஆத்மாவைப்பற்றிய சரீரமும் அநாதியென்று சொல்லவேண்டியிருக்க "நடுவேயோருடம்பு" என்கிறார். இதனால் ஆத்மாவுக்குச் சரீரஸம்பந்தம் இடையிலே வந்ததென்று தோற்றுகிறது. முத்துச்சிப்பியிலுள்ள, முத்துக்கும் பொன்னுக்கும் அழுக்கேறினநா ளறிவாரில்லை. பின் அந்த அழுக்குக் கழிந்துபோகிறதினால் அது இடையிலே வந்ததென்று தோற்றும். அதுபோல் ஆத்மா, ஸர்வேசுவரனைச் சரணமடைந்து அவனருள்பெற்றபின்

ஆத்மாவுக்குள்ள சரீரஸம்பந்தம் ஒழிந்துவிடுகின்றதனால் இது இடையிலே வந்ததென்றறியலாம். இன்னும் இச்சரீரஸம்பந்தம் அரசிளங்குமரன் வழிதப்பிச்சென்று வேடன்கையிலகப்பட்டுத் தன்னை வேடனென்று நினைப்பதுபோல் இருப்பதொன்றும்; என்ற கருத்துப்பட நம்பிள்ளை யருளிச்செய்திருப்பதும் இங்கு அறியத் தக்கது.

இந்தச் சரீரமானது,

"ஊனிடைச்சுவர்வைத்தென்புதூணட்டி
யுரோமமேய்ந்தொன்பதுவாசல்
தானுடைக்குரம்பை........"

என்றபடி, மாம்ஸத்தை இடையிடையேசுவராகவைத்து எலும்பைத் தூணாகநாட்டி உரோமத்தால் மூடப்பட்டு ஒன்பது துவாரங்களை யுடையதாக ஆக்கப்பட்டதாம். "அஸ்தி ஜாயதேபரிணமதே விவர்த்த தே அபக்ஷதெவிநச்யதி" (கர்ப்பத்திலிருத்தல், பிறத்தல், பரிணமித் தல், வளர்தல், குறைதல், மரித்தல்). என்றபடி ஆறுவகையான விகா ரங்களையுடையதாயிருக்கும். இராஜகுமாரன் ஒரு சிறு குடிசையில் ஒதுங்கியிருப்பதுபோல ஜ்ஞாநாநந்தங்களையுடையவன் கர்மத்தால் அறிவைமறைக்கின்ற சரீரத்திலே அகப்பட்டுக்கிடக்கிறான்.

இந்தச் சரீரஸம்பந்தத்தை ஒழித்துக்கொண்டாலொழிய ஆத் மாவுக்கு நிரதிசயாநந்த வாழ்வுண்டாகமாட்டாது. இது மேன் மேலும் அஜ்ஞாநத்தை விளைவிக்குமாதலால் இதைக் கழித்துக் கொள்ளவேண்டுமென்ற எண்ணம் ஆத்மாவுக்குண்டாதல் அரிதா யிருக்கும். எண்ணமுண்டானாலும் தானே ஒழித்துக்கொள்ளுதலும் அரிது. இதுபற்றியே கண்ணன், கீதையில் "மமமாயாதுரத்யயா" (என்னுடையமாயையை நீக்கமுடியாது.) என்று அருளிச்செய்து "மாமேவயே ப்ரபத்யந்தே மாயாமேதாம் தரந்திதே" (என்னையே எவர் கள் உபாயமாக அடைகிறார்களோ அவர்கள் இந்தமாயையைத் தாண் டுகிறார்கள்) என்று அதை ஒழிப்பதற்கும் உபாயமருளிச்செய்தான். "ஒரு குருவிபிணைத்தபிணையை எவனலும்பனால் அவிழ்க்க வொண் ணாதபோது ஸர்வசக்தியாகிய எம்பெருமான் பிணைத்தபிணையை அவன் காலைக்கட்டியே அவிழ்த்துக் கொள்ளவேண்டும்" என்று

பெரியாரும் அருளிச்செய்தார். இதனால் ஒழிக்கவொண்ணாத சரீர ஸம்பந்தத்தை ஸர்வேசுவரன் திருவடியடைந்தே ஒழித்துக்கொள்ள வேண்டுமென்பது பெறப்பட்டது. ஆழ்வாரும்,

"பொய்ந்நின்றஞானமும்பொல்லாவொழுக்குமழுக்குடம்பும்
இந்நின்றநீர்மையினியாமுறாமையுயிரளிப்பான்
எந்நின்றயோனியுமாய்ப்பிறந்தாயிமையோர்தலைவா
மெய்ந்நின்றுகேட்டருளாய்அடியேன்செய்யும்விண்ணப்பமே"

என்று சரீரஸம்பந்தத்தை ஒழித்துக்கொள்ளப் பிரார்த்தித்தார். இவர் பிரார்த்தித்தபடி ஸர்வேசுவரன் இவருக்குள்ள இதர விஷயத்தில் விருப்பத்தை ஒழித்துத் தன் விஷயத்தில் அன்பை யுண்டாக்கினான். இதைக்குறித்து,

*"யாதானுமோராக்கையிற்புக்கங்காப்புண்டுமோப்பவிழ்த்தும்
மூதாவியிற்றடுமாறுமுயிர்முன்னமேயதனால்
யாதானும்பற்றிநீங்கும்விரதத்தைநல்வீடுசெய்யும்
மாதாவினைப்பிதுவைத்திருமாலைவணங்குவனே"

---

*இந்தப்பாசுரத்திற்குப் பெரியவாச்சான்பிள்ளை ஒரு ஐதிஹ்யம் அருளிச்செய்திருக்கிறார். அஃதாவது:- பட்டர் திருக்கோஷ்டியூருக்கெழுந்தருளியிருந்தகாலத்தில் ராமாநுஜதாஸரென்ற ஸ்ரீவைஷ்ணவர் பட்டரைத் தண்டனிட்டு நின்று அடியேனுக்குத் திருவிருத்தம் அருளிச்செய்யவேண்டுமென்று பிரார்த்தித்தார். அப்பொழுது பட்டர் நஞ்சீயரை நோக்கி ஜீயரே! "நம்பெருமாளைவிட்டுப்பிரிந்த சோகம் என் நெஞ்சிற் குடிகொண்டிருக்கிறது; ஆதலால் சொல்லுதற்குச் சக்தியற்றவனாயிருக்கிறேன்; நீரே அருளிச்செய்யும்" என்றார். நஞ்சீயரும் பட்டருடைய நியமனத்தைமேற்கொண்டு அருளிச்செய்தார். அப்பொழுது இந்த "யாதானும்" என்ற பாசுரம்வந்தவுடன் ராமாநுஜதாஸருடன் கேட்டுக்கொண்டிருந்த திருக்கோஷ்டியூர் நம்பி சிஷ்யரான வளவன்பல்லவதரையர் கண்ணீர்சோரப் புளகாங்கிதராய் நின்றார். இந்நிலை கண்ட நஞ்சீயர் அரையரைநோக்கி அரையரே! நீர் இந்தப்பாசுரத்தைக் கேட்டவளவிலே இவ்வளவு ஈடுபடுதற்குக்காரணம் யாதென்றுகேட்டார். அரையர், அடியேனுடைய ஆசார்யராகிய நம்பி அடியேனுக்கு ஹிதமருளிச்செய்கிற காலத்தில் 'நீ எம்பெருமான்திருமுன்பே நாள்தோறும் இந்தப்பாசுரத்தை விண்ணப்பஞ்செய்' என்று ஸாதித்தருளினார். அந்த நினைவு இப்பொழுதுண்டாயிற்று என்றார். நஞ்சீயர் அரையரே! நீர் இந்தப்பாசுரத்திற்கு நம்பி அருளிச்செய்த அர்த்த விசேஷம் ஏதேனும் நினைத்திருக்கின்றீரா? என்று கேட்டார். அரையர், அஃதொன்றும் அடியேனுக்குத் தெரியாது. இந்தப் பாசுரத்தைமாத்திரம் நினைத்திருப்பேனென்றார். அதன் பிறகு நஞ்சீயர் 'இது நம்பி ஆதரித்தபாட்டு' என்று ஐந்தாறு நாழிகைவரை இதையே கொண்டாடி அருளிச்செய்தார் என்பதாம்.

என்று அருளிச்செய்தார். இந்தப்பாட்டுத் திருவிருத்தத்திற்கோர் உயிர்ஸ்தானமாய் நின்று ஆத்மா சரீரத்தில்புகுந்து திரிந்துழல்கின்ற விருத்தாந்தத்தைச் செவ்வையாய் எடுத்துப்போதிப்பிக்கின்றதினால் இதன்பொருள் இங்கு விரிவாய் எழுதப்படுகிறது.

இந்தப்பாட்டில், ஆழ்வார்தமக்கு இதரவிஷயங்களிலுள்ள விருப்பத்தை ஒழித்துத் தன் விஷயத்தில் அன்பை உண்டாக்கின மஹோபகாரனாகிய ஸர்வேசுவரன் திருவடியை அடைகிறேன் என்கிறார்.

யாதானும் ஓர் ஆக்கையில்-ஜந்மாந்த்ர புண்ணிய பாபங்களுக்குத் தகுதியாக ஏதாவது ஒரு சரீரத்தில், யாதானுமோராக்கை என்று உதாசீனந்தோன்றக் கூறியதினால் சூகரம் (பன்றி) முதலிய அற்ப சரீரங்களை குறிப்பிடப்பட்டதாம். இங்கு சரீரத்தை யாக்கை என்ற சொல்லால் வழங்கியதினால் உயிரைக் கட்டுப்படுத்துவதென்பது பெறப்பட்டது. யாத்தல்-கட்டுதல். புக்கு-புகுந்து. ஓரிடத்திலிருந்தபொருள் மற்றோரிடத்திற்குவந்துசேர்தலைப் புகுதல் என்னும், ஓரிடத்திலிருந்தபொருள் அவ்விடத்தைவிட்டு நீங்குதலைப் போதல், செல்தல் என்றும் சொல்வது முறை. இங்கு ஆத்மா ஊழ்வினைக்குத் தகுதியாகச் சரீரத்தில் வந்துபுகுந்தது என்றதினால் ஆத்மாவுக்குச் சரீரஸம்பந்தம் ஒருகாலவிசேஷத்தில்வந்து சேர்ந்ததென்று தோற்றுகிறது. அங்கு ஆப்புண்டும்-அவ்விடத்தில் (வினைவிலங்கினால்) கட்டுப்பட்டிருந்தும்; ஆப்புண்டு என்றதினால் ஒரு சரீரமெடுத்து அந்த ஜாதியிலுள்ளவற்றோடும், அந்த ஜாதிக்குப் போக்யமான வஸ்துக்களோடும் அன்புவைத்து அதிலே அழுந்திக்கிடக்குமென்பது விளங்கும். இன்னும், ஆப்புண்டு என்றதினால் சாஸ்திரப் பழக்கத்தாலும், பெரியோர்களின் உபதேசத்தாலும், பிரத்யக்ஷத்தாலும் இந்தச் சரீரம் மிகவும் இழிவுடையதென்று அறிந்துகொண்டாலும் இதைவிடில் செய்வதென்னென்று நசைகொண்டிருக்குமென்பதும் பெறப்பட்டது. ஆப்பு அவிழ்ந்தும்-அவ் வுடம்போடு கூடியிருத்தற்குரிய ஊழ்வினை கழிந்தவுடன் அவ் வுடம்பின் தொடர்ச்சி நீங்கியும் மூது ஆவியில் தடுமாறும் உயிர்-ஸூக்ஷ்ம சரீரத்துடன் மற்றோர் சரீரத்தில் பிரவேசிக்கும் உயிர். ஆத்மா, ஊழ்வினைக்கு

ஏற்றபடி கொள்ளுகிற ஸ்தூல சரீரங்கள் அழிந்தவிடத்திலும் ஸூக்ஷ்மசரீரம் அழியாது நின்று மோக்ஷதெசையளவுந் தொடர்ந்துவருகிறதினால் மூதாவியென்று சொல்லப்பட்டது. இங்கு ஆவி என்றது ஸூக்ஷ்ம சரீரத்தை. முதுமை-பழமை. ஸூக்ஷ்ம சரீரத்திற்குப் பழமையாவது:-ஸ்தூல சரீரத்தைப்போல் புதிது புதிதாய்த் தோன்றாமையாம். ஆத்மா மேகத்தில்புகுந்து, மழையின் வழியாகப் பூமியிற் பயிரிற் பதிந்து, அந்நரூபமாய்ப் புருஷனிடத்திற் சேர்ந்து, சுக்லமாய் அதன்பிறகு ஸ்த்ரீயின் கர்ப்பத்தில் சேருகிறான் என்பதைக் குறித்துத் தடுமாறும் உயிர் என்று சொல்லப்பட்டது. அன்றி, தடுமாறும் உயிர் என்பதற்கு அம்மை வயிற்றிலும், யமன் கயிற்றிலும் கட்டுண்டு தடுமாறுகிற உயிரென்று பொருள் கொள்ளினும் பொருந்தும். முன்னமே-அநாதியாக. ஆத்மா, முன் குறிப்பிடப்பட்டபடி அலைந்து திரிகின்ற திரிதலானது, இன்னகாலந் தொட்டென்று வரையறுத்துச் சொல்லமுடியாதாதலால் முன்னமே என்று சொல்லப்பட்டது. அதனால்-ஆத்மா நெடுங்காலம் இதர விஷயங்களில் மண்டித் திரிந்ததற்குக் காரணம் இன்னதென்கிறார். அஃதாவது- ஆத்மா நெடுங்காலம் கெட்ட வாஸனையிற் பழகித் திரிந்ததினால் அந்த வாஸனையே உபாத்யாயராக. யாதானும்பற்றி-பகவத் விஷயமொழிய மற்ற ஏதெனும் ஒன்றைப்பற்றி. நீங்கும்-எம்பெருமானைவிட்டு நீங்கும்படியான. விரதத்தை-கோட்பாட்டை. (ஸங்கல்பத்தை) இங்கு விரதம் என்றது, ஸர்வேசுவரன் தன்னைத் தஞ்சமாக அடைந்தவர்களைக் காப்பாற்றுவதே தனக்கு விரதமாகக் கொண்டிருப்பதுபோல, ஆத்மா ஸர்வேசுவரனை விட்டிருப்பதே தனக்கு விரதமாகக் கொண்டிருப்பான் என்பது அறியநின்றது. இராவணன் 'என்னை இரண்டாசப் பிளந்தாலும் ராமனிடத்தில் தலை சாய்க்கமாட்டேன்' என்று சொன்னான். அதுபோன்ற விரதம் இங்குக் குறிக்கப்படுகிறது. நல்வீடு செய்யும்-முற்றும் விடுவிக்கக்கடவனை. கைவல்யநிஷ்டனுக்கு ப்ரகிருதி ஸம்பந்தத்தைமாத்திரம் விடுவிப்பதுபோலில்லாமல் தன்விஷயத்தில் பக்தியை விளைவித்து ப்ரகிருதி ஸம்பந்தத்தைப் போக்குவித்தான் என்பார் நல்வீடுசெய்து என்றார். மாதாவை பிதுவை-உலகத்தில் சரீரத்தை யுண்டுபண்ணிய மாதா பிதாக்கள், ஸம்ஸாரபந்தத்தை விர்த்திசெய்துவைப்பார்கள்; அது

போரவில்லாமல் ஸம்ஸாரபந்தத்தை வேரோடுபோக்கி எனக்கு மாதா வாயும், பிதாவாயு மிருந்து பிரியத்தையும், ஹிதத்தையுஞ் செய்த. திருமாலை-ஸ்ரீய:பதியாகிய ஸர்வேசுவரனை. வணங்குவனே-இதர விஷயங்களில் விருப்பத்தை ஒழித்துத் தன்னிடத்தில் அன்பை விளை வித்த உபகாரத்திற்குச் சமானமாகச் செய்யத்தக்க ஒரு உபகார மில்லாததினால் வணங்குவனோ என்கிறார். இங்கு வணங்குதல் என்றது, ஸர்வேசுவரனுடையபொருளாகிய ஆத்மவஸ்துவை அவனிடத்தில் ஸமர்ப்பிக்கையாம்.

இதுவரையுங் கூறியதனால், சரீரஸம்பந்தமானது ஆத்மா தொழில்செய்வதற்குச் சாதனமாயிருப்பதென்பதும், இது, இன்ன காலந்தொட்டு உண்டாயிற்றென்றறியமுடியாததலால் அநாதியென வும் மோக்ஷதசையில் கழிந்துபோகின்றதினால் இடைவந்ததெனவும் வழங்கலாகுமென்பதும், இது, மேன்மேலும் அஜ்ஞாநத்தை விளை விப்பதென்பதும், இதை ஒழித்துக்கொண்டாலொழிய ஆத்மாவுக்கு நிரதிசயாநந்தவாழ்வுண்டாகாதென்பதும், இதை ஒழித்துக்கொள் வதும் ஆத்மா தன் சக்தியால் செய்யமுடியாதென்பதும், ஸர்வேசு வரனைத் தஞ்சமாகப்பற்றியே இதை ஒழித்துக்கொள்ளவேண்டு மென்பதும், ஆழ்வாரும் இங்ஙனமே அநுஷ்டித்துக் காட்டினாரென் பதும் உரைக்கப்பட்டன.

ஸ்ரீ:

# ஸ்ரீவைஷ்ணவதத்வதிவாகரம்.

[108-ம் பக்கத் தொடர்ச்சி.]

சும— ஸ்வாமி! தன் ஆசார்யனுடைய அனுமதியில்லாமல் மற்றோராசார்யனை யடைந்தவன் திரிசங்குவைப் போலாவான் என்று அருளிச்செய்தீரே; அந்தத் திரிசங்குவின்விருத் தாந்தம் எப்படி?

சகு— திரிசங்கு என்பவன் இக்ஷ்வாகுவமசத்தில் தோன்றியவன். இவன் தன்னுயிரைப்போல் மன்னுயிரையும் பாதுகாத்துவந்தான். இவனுக்குக் குலகுரு வசிஷ்டமாமுனிவர். ஒருசமயம் இவனுக்குச் சிலயோஜனை தோன்றின. அவையாவன:— உலகத்தவர் ஸ்வர்க்காநுபவத்தை விரும்பி யாகஞ்செய்கின்றார்கள். அந்தயாகம் பூர்த்திபெற்றபிறகும் அவர்கள் ஊழ்வினைப்படி இவ்வுலகில் ஜீவிக்கும் நாள்வரை ஜீவித்திருந்து பின் அவ்வுடலைவிட்டு யாகபலனாகிய ஸ்வர்க்காநுபவத்தை யடைகிறார்கள். இஃதென்னபிரயோஜனம். நாம் இக்ஷ்வாகுவம்சத்தில் தோன்றினோம்; நம்குருவோ ப்ருஹ்மபுத்திரராகிய வசிஷ்டமாமுனிவர்; ஆதலால் நமக்கு என்ன குறையிருக்கிறது; ஒன்றுமில்லை. குலசுத்தியும், குருசுத்தியும் தன்னடைவே அமைந்துகிடக்கின்றன. மற்றவர்களைப்போல் நமக்கு ஸ்வர்க்காநுபவங் கிடைப்பது அவ்வளவு விசேஷமில்லை. இந்தச் சரீரத்தோடே ஸ்வர்க்கமடைந்து அவ் வநுபவத்தைச் செய்யவேண்டும்; என்பனவாம். பின் திரிசங்கு வசிஷ்டமஹாமுனிவர் முதலிய மஹருஷிகளை அழைத்து அவர்களுக்குத் தக்க ஆசனங்களை யமைத்து வீற்றிருக்கச் செய்து தண்டனிட்டு நின்றான். அப்பொழுது இவன் கருதியிருப்பதைக் குறிப்பாலறிந்த வசிஷ்டமாமுனிவர் திரிசங்குவைப் பார்த்து உன்னிஷ்டம் என்னவென்று கேட்டார். திரிசங்கு ஸ்வாமி! தேவரீர் எங்கள் குலத்துக் குருநாதராயும், எங்களுடைய விருப்பங்களையெல்லாம் பூர்த்திசெய்துவைப்பவராயும் மஹாநுபாவராயு மிருக்கின்றீர்; தேவரீரால் சாதிக்கமுடியாத கார்ய மொன்றுமில்லை; உம்முடைய மகிமையை அளவிடமுடியாது. இதுநிற்க, அடியேன் இக்ஷ்வாகுவம்சத்திற் பிறந்தவனாயும், தேவரீரைக் குலகுருவாகக் கொண்டவனாயு மிருக்கிறபடியால் குல சுத்தியும், குரு சுத்தியு முடையவனா யிருக்கின்றேன். ஆகையால் அடியேனுடைய இஷ்டத்தைப் பூர்த்திசெய்துவைக்கவேண்டுகிறேன் என்றான். இதுகேட்ட வசிஷ்டமா

முனிவர் திரிசங்குவைப் பார்த்து உன்னிஷ்டம் என்ன? என்று வினவினர்.

திரிசங்கு ஸ்வாமி! அடியேனுக்கு ஸ்வர்க்காநுபவத்தில் விருப்பமுண்டாயிற்று. முன்பு ஸ்வர்க்காநுபவத்தை விரும்பி யாகஞ்செய்தவரெல்லாம், அதன்பலனாகிய ஸ்வர்க்காநுபவத்தைத் தங்கள் சரீரமுடிவின்பின் செய்தார்களென்று கேள்வியுற்றேன். அப்படிச் செய்வதில் அடியேனுக்கு இஷ்டமில்லை. மேலும் அவ்வாறுசெய்வது அடியேன் குலத்தின் பெருமைக்கும் தேவரீரின் தவத்தின் பெருமைக்கும் பொருந்தாததாகும். இந்தச் சரீரத்தோடு சென்று ஸ்வர்க்காநுபவஞ்செய்ய ஆசையுற்றேன். ஆதலால் இதைப் பூர்த்திசெய்விக்க விரைவில் வேள்வி தொடங்கவேண்டும் என்றான்.

இதுகேட்ட வசிஷ்டமாமுநிவர் 'அந்தோ! இவ்வரசனுக்கு விபரீதபுத்தி யுண்டாயிற்று; என் செய்வது இதை ஒழிக்கவேண்டியதும், பின்வரும் நன்மை தீமைகளை யறிந்து முன் உபதேசிக்கின்ற காரணம்பற்றிப் புரோஹிதனெனப் பெயர்படைத்த நம் கடமையாகும்.' என்று நினைத்துத் திரிசங்குவை நோக்கி அரசே! நீர் எல்லோராலும் போற்றத்தக்க இக்ஷ்வாகுவம்சத்தில் தோன்றி நீதி தவறாது ராஜ்யபரிபாலனஞ் செய்கின்ற அரசனாயிருக்கின்றீர். நானோ, தவவொழுக்கத்தை மேற்கொண்ட ருஷியாயிருக்கின்றேன். இப்படி இருக்கிற நாமிருவரும் செய்யத்தக்க காரியம், லோகப் பழிப்பில்லாமல் முன்னோரின் ஆசாரத்துக்கும், சாஸ்திர வசனத்திற்கும் இசைந்ததாயிருத்தல்வேண்டும். இதற்கு விரோதமாயிருக்குமாகில் நாம் நிந்திக்கப்பட்டவராவோம். நீர் இப்பொழுது விரும்பியகார்யம் லோகப் பழிப்புடையதாயும், சாஸ்திரவிரோதமாயுமிருக்கிறபடியால் இவ் விருப்பத்தை ஒழித்துவிடுவீராக என்றார். இதுகேட்ட திரிசங்கு ஸ்வாமி! தேவரீர் தவமகிமையால் செய்தற்கரியவற்றையெல்லாம் மிகவும்

எளிதாய்ச் செய்துவிடலாம். அப்படியிருக்க அடியே னிடத்தில் இரக்கமில்லாததினால் 'நீ நினைத்த கார்யம் லோகப்பழிப்பும் சாஸ்திரவிரோதமுமுடையதாம்' என்று சொல்லுகிறீர்; நீர் எங்களுடைய குலகுருவாயிருந்து என் முன்னோர்களாலும், என்னாலும் எவ்வளவோ பிரதிப்பிரயோஜன மடைந்திருக்கின்றீர்; அந்த நன்றிகளை மறவாதிருப்பீராகில், நான் விரும்பியதைப் பூர்த்திசெய்துவைப்பீர்; இப்பொழுது நான் விரும்பிய கார்யத்தில் தடைசெய்கின்றீராதலால்,

"நினக்கொலாதாகின்ஐயநீணிலத்தியாவரேனும்
மனக்கினியாரைநாடிவகுப்பல்யான்வேள்வியென்ன......"

என்றபடி எனக்கிஷ்டமுடைய வேறோர் குருவையடைந்து இச் சரீரத்தோடு ஸ்வர்க்கமடைதற்குரிய யாகத்தைச் செய்வேன் என்றான். இந்தச் சொல்லைக் கேட்டவுடன் வசிஷ்டர்,

"சினக்கொடுதிறலோய்முன்னர்த்தேசிகற்பிழைத்துவேறோர்
நினக்கிதனடிநின்றாய்நீசனாய்விடுதியென்றான்"

என்றபடி கோபங்கொண்டு நீசனாய்விடுவாய் என்று சபித்தார். உடனே திரிசங்கு அழகழியப்பெற்றுப் பலரும் இகழ்தற்குரிய விகார வடிவுடையவனாய் நின்றான். அப்பொழுது,

"காசொடுமுடியும்பூணும்கரியதாங்கனகம்போன்று
தூசொடுமணியுமுந்நூல்தோற்றருந்தோற்றம்போன்று
மாசொடுகருகிமேனிவனப்பழிந்திடவூர்வந்தான்
஛சியென்றியாருமெள்ளத்திகைப்பொடுபழுவஞ்சேர்ந்தான்"

என்றபடி நகரமாந்தரெல்லாம் இகழ்ந்தார்கள். ஈதென்ன விபரீதமென்று திகைப்புற்றுக் காட்டையடைந்து சுற்றித் திரிந்தான். இவ்வாறு சிலநாள் சென்றபின் விசுவாமித்ரரைச் சந்தித்துத் தண்டனிட்டு நின்றான். விசுவாமித்ரர் 'நீ யார்' என்று வினவினர். அப்பொழுது திரிசங்கு முன்

நடந்த விருத்தாந்தங்களைச் சொன்னான். விசுவாமித்ரர் இவன்மீது இரக்கங்கொண்டு 'யான் வேள்விசெய்து உன்னைச் சுவர்க்க மேற்றுவிப்பேன், நீ கவலைப்படா திருப்பாய்' என்று உறுதிமொழி கூறி அருகிலுள்ள தவசிரேஷ்டர்களையும், வசிஷ்டபுத்ரர்களையும் 'வேள்விசெய்தற்கு வாருங்கள்' என்று அழைத்தார். வசிஷ்ட புத்ரர்கள் 'நீர் செய்ய விரும்புகின்ற கார்யமானது சாஸ்திரவிரோதமுடையதா யிருக்கின்றதனால் நாங்களிதற்கு இசையமாட்டோம்' என்றார்கள். உடனே விசுவாமித்ரர் அவர்கள் மீது சீற்றங்கொண்டு 'நீங்கள் வேடரா யொழிவீராக' என்று சபித்துவிட்டு வேள்விதொடங்கி முடித்து 'என் தவமகிமையால் யான் உனக்கு ஸ்வர்க்கந் தந்தேன். செல்வாய்' என்று சொன்னார். உடனே அவ் வேள்வியினின்றும் ஒரு விமானந் தோன்றிற்று. திரிசங்கு அதன்மீதேறி ஸ்வர்க்கமடைகிற காலத்தில்,

"ஆங்கவன் துறக்கமெய்தவமரர்கள்வெகுண்டுநீயார்
ஈங்குவந்திடவெதன்னேயிருநிலத்திழிகவென்னத்
தாங்கலில்கவிழ்வான்மற்றுத்தாபதசரணமென்ன
ஓங்கினனின்னிலென்னவுரைத்தருமொக்கநக்கான்"

என்றபடி 'நீ இந்த நீசவேஷத்தோடு இவ்வுலகுபுகுகின்ற வாறென்னே!' என்று தலைகீழாகப்பிடித்துத் தள்ளினார்கள். அப்பொழுது திரிசங்கு 'விசுவாமித்ரரே! சரணம்' என்று முறையிட்டான். அதுகேட்ட விசுவாமித்திரர் 'நில் நில்' என்று கூறித் தம் தவமகிமையால் அந்நிலையில் திரிசங்குவிற்கு ஒரு ஸ்வர்க்கத்தைச் சிருஷ்டித்து, 'இன்னும் இந்திராதியர் முதலான முப்பத்துமுக்கோடி தேவர்களையும், மற்றுமுள்ளவைகளையும் சிருஷ்டிப்பேனென்' என்று பிரதிஜ்ஞைசெய்து சிலசிருஷ்டிகளையுஞ் செய்தார். அதன்பின் பிருஹ்மாதி தேவர்கள் இவருடை க்ரூர முயற்சியைக்கண்டு இவரது சீற்றத்தைப் பொறுப்பிக்க இவர்முன் தோன்றி 'விசுவாமித்ரரே! உம்முடைய தவ

215



மகிமைக்கு நாங்கள் மிகவும் வியக்கின்றோம். இனி, நீர் கோபத்தை ஒழித்துச் சிருஷ்டிசெய்கின்ற தொழிலின் றும் தவிர்வீராக; நீர் சிருஷ்டிக்கும் வலிமையுடையீர் என்பதற்கு அறிகுறியாக இந்தத் திரிசங்குவின் அந்தர ஸ்வர்க்கம் விளங்கக்கடவது' என்றார்கள். உடனே விசுவாமித்திரர் சீற்றத்தினின்றகன்று சிருஷ்டித்தொழிலை ஒழித்து நின்றார். அது முதல் திரிசங்குவானவன் இங்குமின்றி அங்குமின்றி மத்தியில் தங்கி நிற்கின்றான். இதுவே இவனுடைய விருத்தாந்தமாம்.

சும— ஸ்வாமி! தேவரீர் அருளிச்செய்த விருத்தாந்தத்தால் ஒரு குலத்தில் பரம்பரையாக ஆசார்யனாயிருப்பவனையே அக்குலத்தினர் ஆசார்யனாகப்பற்றவேண்டுமென்பது தோற்றுகிறது. இது நிற்க,

"ஞானமநுட்டானமிவைநன்றாகவேயுடைய
னானகுருவையடைந்தக்கால்......"

என்று மனவாளமாமுனிகள் அருளிச்செய்த ஸ்ரீ ஸூக்தியாலும் "சேர்ப்பாரைப்பக்ஷிகளாக்கி ஜ்ஞாநகர்மங்களைச் சிறகாக்கி..." என்ற ஆசார்ய ஹ்ருதயவசனத்தாலும்,

*"உபாப்யாமேவ பக்ஷாப்யாம் ஆகாசே பக்ஷிணாம் கதி:
ததைவ ஜ்ஞாந கர்மப்யாம் ஆசார்யஸ்ய......"

என்ற வசனத்தாலும் ஆராய்ந்து பார்த்தால் ஜ்ஞாநாநுஷ்டானங்களைச் செவ்வையாகவுடையவனையே ஆசார்யனாகப்பற்றவேண்டுமென்று விளங்குகிறதேயன்றி பரம்பரையாகவந்த ஆசார்யனைப்பற்றவேண்டுமென்ற ப்ரமாண ப்ரஸித்தியிருப்பதாகத் தோற்றவில்லையே; இப்படியிருக்கத் தேவரீர் அருளிச்செய்த விருத்தாந்தமானது விரோதப்படுகிறதே?

(தொடரும்.)

---

*இதன்பொருள் பக்ஷிகள் தம் இரண்டு சிறகுகளின் சகாயத்தால் ஆகாசத்திற் செல்வதுபோல் ஆசார்யன் ஜ்ஞாநாநுஷ்டானங்களாகிய சிறகுகளின் ஸகாயத்தால் பகவத்சாமீப்யத்தை அடைகிறான் என்பதாம்.

216

ஸ்ரீ:

# மதிப்புரை.

ஆர்யதர்மம்:— இப்பெயர் புனைந்த அரிய பெரிய பத்திரிகையானது, நீண்டகாலமாக நம் நாட்டிற் பலவிடங்களிலும் பரவி, ஆஸ்திகர்களாயுள்ள அனைவர்க்கும் நல்லறிவை வளரச்செய்துவருகிறதென்பதை அநேகர் அறிந்திருப்பார்கள். இது, திருக்குடந்தையில் எழுந்தருளியுள்ள ஸ்ரீகாஞ்சீ காமகோடிபீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் அநுக்ரஹத்தை முன்னிட்டு, குருவாரந்தோறும் ப்ரசுரம் செய்யப்பட்டுவருகிறது. ஸமீபகாலத்தில் வெளிவந்த இதன் ஸஞ்சிகைகள் சில நமது பார்வைக்குக் கிடைத்ததைப்பற்றி மிகுந்த க்ருதஜ்ஞதை பாராட்டுகிறோம். இப்பத்திரிகை தன் பெயருக்கு ஏற்ப ஆர்ய மதத்தின் பொதுவானகொள்கைகளை அருமையாகப் போதிப்பதிலும், ஸநாதனதர்மத்தைத் தளராமற் காப்பதிலும் சிறந்த கருவியாயுள்ளதென்பதை நாம் விஸ்தரித்துச்சொல்லவேண்டுவதில்லை. அத்வைத ஸித்தாந்தச் சார்பான விஷயங்கள் இதில் மிகுதியும் வ்யவஹரிக்கப்படுகின்றன. இதன் பத்திராதிபர், ஸ்ரீமடம் ஆஸ்தான வித்வான் 'பாஷ்ய பாவஜ்ஞ ஸ்ம்ருதிபூஷண' வரகூர், ஸ்ரீ வேங்கடராம சாஸ்திரிகளென்னும் பெரியாரென்று அறிகின்றோம். இதிலுள்ள விஷயங்கள் ப்ரமாணபலத்துடன்கூடி மிகவும் சுலபமான தமிழ்நடையில் அமைந்து விளங்குகின்றன. இவ்வாறு வைதிகதர்மத்தின் வளர்ச்சியைக்கருதிய பத்திரிகைகள் மிகச்சிலவேயுள்ள இக்காலத்தில் அவை நம் ஆரிய நன்மக்களால் எவ்வளவாக ஆதரிக்கத்தக்கனவென்பது சொல்லவேண்டுமோ? ஆதலால் இத்தகைய பத்திரிகைகள் எக்காலத்தும் நின்று நிலவுமாறு ஸர்வேசுவரன் திருவருள்புரிவானாக. இதன் வருஷச்சந்தா ரூபா மூன்றேயாகும். வேண்டுவோர் கும்பகோணத்தில் இதன் பத்திராதிபர்களுக்கு எழுதிப் பெறலாம்.

யினையபதிகணினையுமவர்கள்
வினைகண்மிடிகள்பசிகள்பழிக
ளவையுமவலமுழுதுமகல வருளேசெய்

தினியதிருவுமினியவறிவு
முதவுமுனதுசரணகமல
மெனதுமனதுபயிலமுயலு மதிதாராய்

புனையுமிதிலைமகளிர்மறுகு
மறுகுபிறகுகழியவாசு
பொலியுமனைமுனணுகியவையி லழகர்கப்

புகுதுமளவின்முனிவனடிகள்
பரவிமருவியுடலமினிது
புளகமெரியவயனையனைய பெரியோனே

தனுவுமரியகணையுமெவரு
மெழுதவரியவடிவுமினிய
சதுரனளவிலருளுமுடைய தனியர்ண்மைச்

சமரகுமரன்வரவையுரைசெ
பெனவுளுருகியிருகைதொழுது
சனகன்வினவுகரியபெரிய பெருமாளே.

[குறிப்பு:— வனிதை-ஆண்டாள். மருவு-பொருந்திய. புதுவை-ஸ்ரீவில்லிபுத்தூர். குருகை-ஆழ்வார்திருநகரி. பிரிதி-திருப்பிரிதி; இது வடநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்று. புலிசை-திருப்புலியூர்; இது மலைநாட்டுள்ளது. சிறுபுலிசை-சிறுபுலியூர்; இது சோழநாட்டிற் காவிரியின் றென்கரையி லுள்ளது. வெளறை-திருவெள்ளறை; இது காவிரியின் வடபாலுள்ளது. கணபுரம்-திருக்கண்ணபுரம். விணகர்-திருவிண்ணகர்; காவிரியின்தென்கரையி லுள்ளது. கடிநகர்-திருக்கடித்தானம்; இது மலைநாட்டுள்ளது. கடிகை-தொண்டைநாட்டுள்ள திருக்கடிகை. துவரை-துவாரகை. நறைசை-திருநறையூர். வதரி-வதரியாச்சிரமம். கரிகிரி-அத்திகிரி (காஞ்சீபுரம்). அரிவிணகரி-திருவரிமேய விண்ணகரம்; காவிரியின் வடகரையிலுள்ளது. திருநைமிசம்-திரு நைமிசாரணியம். ஆலி-திருவாலிதிருநகரி. இனைய-இப்படிப்பட்ட. பதிகள்-திவ்யதேசங்கள். மிடி-தரித்திரம். அவலம்-மனக்கவலை. திரு-செல்வம். உதவும்-கொடுக்கின்ற.

218



சரணகமலம்-பாததாமரைமலர். முயலும்-முயற்சிக்கின்ற. மதி-அறிவு. புனையும்-அலங்கரிக்கப்பட்ட. மறுகு-மனங்கலங்கிய. மறுகு-வீதி. பிறகுகழிய-பின் செல்ல. அரசுபொலியுமனை-ஜனகராஜக்ருஹம். முனிவன்-விசுவாமித்திரன். பரவி-வணங்கி. அடிகள் மருவிப் பரவி எனக் கூட்டுக. மருவி-அடைந்து. புளகமெறிய-(சந்தோஷத்தால்)மயிர்சிலிர்க்க. அயன்-பிரமன். அனைய-ஒத்த. தனு-வில். கணை-அம்பு. வடிவு-உருவம். சதுரன்-சமர்த்தன். சமரகுமரன்-போர் வீரன்; போரிலே குமரனையொப்பான் எனினும் ஆம்.]

42. மனையொடுவெர்சல்கண்டிருந்து
விளைமடவாருடன்பயின்று
மருவியதாயர்தந்தைமுன்பின் [1]வருபாலர்

மரபினுளார்களென்றுதுன்று
நெடுவலையூடுசென்றழுந்தி
வழிவழிபாதகம்புரிந்து திரிவேனைத்

தினையளவேனுமன்புதந்து
னடியவரோடுதொண்டுகொண்டு
சிறுகுகள்பாவையுங்களைந்து சடகோபர்

திருமறையாயிரந்தெளிந்து
வளமுளகோயிலின்கண்வந்து
ஜெயஜெயவாழியென்றியம்ப [2]வருள்வாயே

வினவிபபோர்துகங்கைதந்த
நரபதிபேரன்மண்டலஞ்செய்
வெயில்விடுபானுவம்சதுங்கன் மநுநீதி

விரவியகோசலம்புரந்த
சரயுநனதனிங்குநின்ற
விறலினையானுடங்கிருந்த விருவோர்முன்

றனிமகனாகவந்தகொண்டல்
பெயருமிராமசந்த்ரனுங்கள்
தனுவலிகாணவந்தபண்ப னுலகாளுந்

1. மகிழ்பாலர். 2. வருடாராய்.

தயரதநூபன்மைந்தனென்று
கவுசிகர்கோன்விளம்பவன்று
சனகன்முனேவிளங்கிநின்ற பெருமாளே.

[குறிப்பு:— மடவார்-பெண்கள். முன்-உடன்பிறந்தாருள் மூத்தோர். பின்-இளையோர். துன்றுதல்-நெருங்குதல். வழிவழி-மேன்மேலும். சிலுகு-தடை. களைந்து-நீக்கி. சடகோபர் திருமறையாயிரம்-நம்மாழ்வார் அருளிச்செய்த வேதமாகிய திருவாய்மொழியாயிரம் பாசுரங்களையும். கோயில்-திருவரங்கம். வினவியபோது-ஜனகன் கேட்டபொழுது. கங்கைதந்தநரபதி-பகீரதன். மண்டலஞ்செய்தல்-(உலகத்தை) வலம்வருதல். பாநு-சூரியன். துங்கம்-உயர்வு. கோசலம்-கோசலதேசம். புரந்த-காத்த. சரயுநனுதன்-சரயுநதியையுடைய சிறந்ததலைவன். இங்குநின்ற விறலிளையான்-இலக்குமணன். விறல்-வெற்றி. அங்கிருந்த இருவோர்-திருவயோத்தியிலேயிருந்த பாத சத்துருக்கர். கொண்டல்-மேகம். தனு-வில்.]

43. ஆனையதுமூலமெனத்த
ருவிவிடுபோதிலழைக்க
வாதரவி ஞேடுவணப்புள் மிசையேறி

யானமலர்வாவியினுற்று
மாமுதலைவீடுபெறப்பொன்
ஆழிதனையேவுவிசித்ர மதுபோலே

மேனியிருள்போலுநிறத்த
காலனெனைமோதுகயிற்றின்
வீசியெதிராடியலைத்து வருபோதின்

வீரவடிவாளியும்வெற்றி
வார்சிலையுநீயுமெனக்கு
மேவு[2] துணையாயெதிர்நிற்க வரவேணும்

தானைமிதிலேசனுரைக்க
வோரறுபதாயிரமிக்க
தாவில்வயவீரர்நெருக்கி நிரைதோளின்

1. ஞேடுமறைப்புண். 2. துணையாய் வெளிநிற்க நினைவாயே.

சாதுரியமானவியத்தி
ஹூடுதறிபேணிமடுத்த
சார்பினிடைமார்பினணைத்து நனிபோதா

மாதிலமொராேழுமதிக்க
ராஜசபைமீதினிலிட்ட
1வானிடுவின்மேருநிகர்த்த சிவசாபம்

வாழ்வுபெறுசீதையொருத்தி
சூடியிடநாடியெடுக்கு
மாலையெனவோடியெடுத்த பெருமாளே.

[குறிப்பு:— ஆனை-கஜேந்திரன், ஆவி-உயிர். ஆதாவு-அன்பு. உவணப் புள்-கருடன். ஆழி-சக்கரம். காலன்-யமன். கயிற்றின்-கயிற்றினுல். எதிராடி-எதிர்த்து. அலைத்து-வருத்தி. வடி-கூர்மை. வாளி-பாணம். வார்சிலை-நீண்ட வில் (சர்ங்கம்). தானை-படை. மிதிலேசன்-ஜனகன். தாவில்வயவீரர். குற்ற மற்ற வெற்றியையுடையவீரர். நிரை-ஒழுங்கு, வரிசை. தோளின்-தோளினு லும். சாதுரியமான வியத்தி ஹூடு தறிபேணி மடுத்த சார்பினிடை-சாமர்த்திய மாக மேலுங் கீழும் நெடுக்குங் குறுக்குமாக இடையே விரும்பிக்கோத்த மூங்கில் தண்டங்களைப் பற்றுமிடங்களில். மார்பின்-மார்பினுலும். அணைத்து-வளைத்துப் பிடித்து. மிக்ககனமுள்ள பொருளைத் தூக்கிச்செல்லுவோர், நேராகவும் குறுக் காகவும் இட்ட தறிகளின்மேல் அப்பொருளை அமைத்து, நேராக இட்ட தறி களைத் தோளிலும் அதன்கீழ்க் குறுக்காக இட்ட தறிகளை மார்பிலும் தாங்கிக் கொண்டு செல்லுவர்; அதனை இங்குக் கூறினர். நனிபோதா-விரைந்துவந்து வானிடுவில் மேரு நிகர்த்த சிவசாபம்-வானவில்லையும் மேருவையும் ஒத்த சிவ தனுவை.]

44. அகத்திலுமிருப்பை
புறத்திலுநடப்பை
யளித்துடனழிப்பை யழியாதே

படக்குவைதெரித்து
விடுப்பைவெளிகிற்பை
யருட்செயநினைப்பை யொழியாவுன்

---

1. வானுறுவின்.

மகத்துவமொருத்த
    ருரைக்கவுமெடுத்து
    வழுத்தவுமதிக்கில் — னளிதோவென்

வசத்திலொரியற்கை
    செயற்கையிலைமற்றுன்
    வழிப்படுமெனக்கு — நிகர்யாரே

நகத்திரள்வெடிக்க
    மதக்கரிபதைக்க
    நடுப்பணிநெளிக்க — மதிபானு

நலக்குறவுடுக்கள்
    பொடப்பொடெனவுட்க
    நமற்குயிர்திடுக்க — முறவேநீள்

சகத்ரயமனைத்து
    நடுக்குறநிருத்தர்
    தனிச்சிலைசிமிழ்ப்பி — னவையூடே

சடக்கெனவெடுத்து
    முறித்துநிகரற்ற
    சமத்துநிலையிட்ட — பெருமாளே.

[குறிப்பு:— அளித்தல்-படைத்தல். தெரித்து விடுப்பை-(உன்னுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளைச் சேதனர்கள்) அறியும்படி செய்வாய். வெளி நிற்பை-உன்னையறிந்தவர்க்கு ப்ரத்யக்ஷமாவாய். அருள்செய நினைப்பை என்பது சந்தநோக்கி அருட்செயநினைப்பை என விகாரமாயிற்று. வழுத்துதல்-துதித்தல். மதித்தல்-எண்ணுதல். என்வசத்தில் ஒரியற்கை செயற்கை இலை-என்னிடத்தில் இயற்கையாகவேனும் அல்லது செயற்கையாகவேனும் (ஞானசக்த்யாதி விசேஷங்கள்) இல்லை. மற்று-அசை. நகத்திரள்-மலைக்கூட்டம். மதக்கரி பதைக்க-மதங்கொண்ட (திசை) யானைகள் நடுங்க. நடுப்பணி-(உலகத்தை)நடுவேநின்று தாங்கும் ஆதிசேடன். மதி-சந்திரன். பானு-சூரியன். நலக்குற-வருந்த. உடுக்கள்-நக்ஷத்திரங்கள். பொடுப்பொடென-ஒலிக்குறிப்பு. உட்குதல்-மடிதல். நமற்கு-யமனுக்கு. சகத்ரயம்-மூன்றுலோகம். நிருத்தர்-சிவபிரான். தனிச்சிலை-ஒப்பற்றவில். சிமிழ்ப்பின்-கண்ணிமைப்பதற்குள். அவையூடு-ஜனகஸபையில். எடுத்துச் சடக்கென முறித்து எனக் கூட்டுக. சமத்து-சமர்த்து-பலம்.]

45\. மேகநிறம்வாழிபற்ப
நாபிமலர்வாழிசக்ர
மேவுகரம்வாழிநித்தம் வினைமூடும்

வேதனைகள்சேர்பிறப்பை
மாறியினிஞானமுத்தி
வீடுதரவ்வணுமற்ற தருளாயேல்

த்யாகபரனாகமிக்க
வாழ்வுடையனாகவுற்ற
சீலகுணனாகநிற்க விசைபூணுஞ்

சீரியவனாகவெற்றி
மாகவிஞனாகரக்ஷை
சேரடிமையாகமுற்றும் அருள்வாயே

நீகருணையாலளித்த
ராகவனெனன்வேள்வியுற்று
நீடுசிலைதான்முறித்த படியாலென்

சேயமகள்பாணிபற்ற
வேணுமினிமாதர்மக்கள்
நேரில்படையோடமைச்சர் இளைசூழ

வர்கடிதெனநிறுத்த
கோசலமகீபதிக்கு
மாசில்கலியாணபத்ர மதனோடு

வாய்மைபெறுதூதுவிட்ட
நீள்சனகர்கோனைமிக்க
மாமனெனவேபடைத்த பெருமாளே.

[குறிப்பு:— பற்பநாபி-உந்திக்கமலம். மாறி-ஒழித்து. த்யாகபரன்-கொடையுடையவன். நிற்க-என்றும் அழியாதிருக்கும்படி. ரக்ஷை-பாதுகாப்பு. 'நீ' என்பது முதல் 'கடிதுவா' என்பதுவரை ஜனகன் கூற்று. பாணி-கை. கடிது-சீக்கிரம். நிறுத்த-ஸ்தாபிக்கப்பட்ட. மாசில்-குற்றமற்ற. வாய்மை-உண்மை.]

46. நினைவிலேயவரோடுமொழிந்திடு
மொழியிலேதவறாதுநடந்திடு
நெறியிலேவினையாவையும்வென்றிடு முணர்வுடைய்

நிலையிலே[1]யழகாகநிரம்பிய
வடிவிலேயிருபோதுநிரந்தர
நினதுபாவனையேகொடுநின்றிடு [2]மடியார்தம்

மனையிலேயவர்கூடியிருந்துள
சபையிலேயவர்கால்கணடந்துள
வழியிலேயெழுதூளியெனும்படி திரியாதே

மடநலார்வசமாகியயர்ந்திடு
கொடியனேனொருகாலமடங்கியுன்
வரசரோருக[3]பாதயுகந்தனி லடைவேனோ

சனகர்கோன்விடுதூதர்வழங்கிய
வினியவோலையையோதியுணர்ந்துள
தனமெலாமெதிர்வீசிமகிழ்ந்துத னுயிர்போலுந்

தனையராமிருவோர்கண்மடந்தைய
ராறுபதாயிரமுவர்கண்மந்திரிகள்
சகலசேனையும்யாவருமன்பொடு புடைசூழ

வினயமாகவொரோசைநெடுங்கடல்
வருவபோன்முரசானததிர்ந்திட
விரைவினாலழகாகியசந்திர வஊரமேவி

விசைகொடேர்மிசையேவருதந்தையை
யெதிர்கொளாவனைவோர்களொடுந்திரு
மிதிலை[4]மேவியராகவவண்டர்கள் பெருமாளே.

[குறிப்பு:— நினைவிலே-நினைவிலும். மொழிதல்-சொல்லுதல், மொழியிலும். நெறியிலே-வழியிலும். வினையாவையும் வென்றிடு முணர்வுடைய் நிலையிலே-வினைகளையெல்லாங் கடத்தற்குரிய யோகநிலையிலும். இருபோது-அந்திசந்தி; இரவும்பகலுமாம். நிரந்தரம்-எப்பொழுதும். பாவனை-தியானம். கொடு-

1. யழகாகி. 2. முனதாசர். 3. சீர்பாதந்தனி. 4. மேவுவியோமநிறங்கிளர்.

கொண்டு. மனை-வீடு. வா சரோருக பாதயுகந்தனில்-சிறந்ததான இரண்டு திருவடித்தாமரைமலர்களிலும். தனம்-பொருள். தனையராமிருவோர்-புதல்வர்களாகிய பரத சத்துருக்கர். மடந்தையரறுபதாயிர மூவர்-சாதாரண மனைவியர் அறுபதினாயிரவரும், பட்டத்தரசியரான கோசலை, கைகேயி, சுமித்திரை யென்ற மூவரும். 'யாவரும் அன்பொடு புடைசூழ, ஓரோசைநெடுங்கடல் வருவதுபோல்........................................ தேர்மிசையேவருதந்தையை வினயமாக எதிர்கொளா' எனக் கூட்டுக. விநயம்-வணக்கம். வருவதுபோல் என்பது வருவபோல் என்றானது விகாரம்.]

47. விதியென்றுருக்கொடிந்த
வுலகம்படைப்பையிந்த்ரன்
மிகுநண்புபற்றுதம்பி யுருவாகி

விரகின்புரப்பைகங்கை
முடிகொண்டபித்தனென்று
மிடல்கொண்டழிப்பையுன்றன் விளையாடல்

கதி[1]கண்டுரைப்பதன்று
சொருபந்தெரிப்பதன்று
ககனஞ்சிறப்பமைந்த திருமேனி

கருதுங்கணக்கிறந்த
துனைநெஞ்சுறத்தெளிந்து
கரைகண்டுநிற்குமின்ப மடைவேனோ

எதிர்கொண்டழைத்துவந்த
சனகன்பதிக்குள்வந்து
ரவிதன்குலத்துயர்ந்த நரபால

னெழின்மண்டபத்திருந்த
பினர்பண்பிலக்கணங்கள்
எவையுத்தெரிக்கவன்று மகிழ்சீதை

மதிமண்டலத்தைவென்ற
முகமும்பெருத்தகொங்கை
மலையுஞ்சிறுத்தனுங்கு மிடைநூலும்

1. கொண்டு.